# உருமு தனலெட்சுமி கல்லூரி
# நமது வளாகம் – செய்தி மடல்

Feb.2018 இதழ் XVI



உழைப்பே உத்தமம் தொழுகை

வணக்கம்,

ஒரு நல்ல தாயும் தந்தையும் ஒரு சிறந்த குடும்பத்தின் இரு கண்களாய் விளங்குவர். அவ்வாறே தனித்துவம் பெற்ற நம் பாரதத்தின் இரு கண்களாய்ப் போற்றப்படும் நாட்கள் சுதந்திர தினமும், குடியரசு தினமும் ஆகும். 69ஆவது குடியரசு தினவிழா நமது கல்லூரியில் வழக்கம்போல் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதிக அளவில் பேராசிரியர்களும் மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டனர் என்பது ஓர் சிறப்புச் செய்தியாகும். தொடர்ந்து நடைபெற்ற விழிப்புணர்வு முகாம்கள், கலைப்போட்டிகள், வாசகர் வட்டம், மாணவர் கருத்தரங்கம் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் எனப்பல நிகழ்ச்சிகளை உங்கள் கருத்துக்கு முன்வைக்கிறது இந்தச் செய்திமடல்.

- வாழ்த்துகளுடன்,

ஆசிரியர் குழு.




**ஆசிரியர் குழு :**

முனைவர் N. கண்ணன்,
முனைவர் தே. இந்திரகுமாரி,
முனைவர் செந்தில்,
முனைவர் பிரதீபா,
திரு. சுவாமிநாதன்,
திரு. கார்த்திக் சரவணன்,
திரு. ஆசைத்தம்பி,
முனைவர் கு. வடிவேல்முருகன்.

You could follow us on
udcnewsletters@gmail.com


## உடலும் ஆரோக்கியமும் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சி



நமது கல்லூரியின் சமூகப் பணித்துறையின் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவி த.வினோதா 'சேவா சங்கம்' பள்ளி மாணவிகளுக்கு உடலும் ஆரோக்கியமும் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சியை 20.01.2018 அன்று நடத்தினார். இந்நிகழ்விற்கு முனைவர் சோ.மனோன்மணி சிறப்புரை வழங்கினர்.

## குடிபோதையின் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



நமது கல்லூரியின் சமூகப்பணித்துறை மற்றும் சாக்சீட் குடிபோதை மறுவாழ்வு மையம் இணைந்து குடிபோதையின் தீங்குகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியைப் பெல்ஸ் மைதானத்தில் 06.01.2018 அன்று நடத்தியது. சாக்சீட் குடிபோதை மறுவாழ்வு மையத்தின் ஆலோசகர் திரு.P.சுரேஷ் அவர்கள் குடிபோதையின் தீங்குகள் குறித்து மக்களுக்கு உரையாற்றினார்.

## குடியரசு தின நிகழ்ச்சிகள்





•**Thiru. Mohamed Fiyaz** – Illustrious Alumnus was the Chief Guest hoisted National Flag and took the salute of our college. **Secretary Kalki. Ram**, Treasurer **G.N.Srinivasan, Principal Dr. D.Christy Selvarani** and faculty members took part in the celebrations. NCC cadets exhibited splendid March Past on the occasion. The winners of various competitions were honored with prizes. Major Dr.N.Sivakumar, NCC officer proposed vote of thanks.

## கலந்துரையாடல் நிகழ்ச்சி





ISRO விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை அவர்கள் 30.12.2017 அன்று திருச்சி பிஷப்ஹீபர் கல்லூரிக்கு வருகை தந்து மாணவர்களுடன் கலந்துரையாடினர். இதில் நமது கல்லூரி இயற்பியல் துறையைச் சேர்ந்த 30 மாணவர்கள் கலந்து கொண்டு சிறந்த கேள்விகளைக் கேட்டனர்.

## கோலப்போட்டிகள்







பொங்கல் விழாவை முன்னிட்டு வேதியியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவர்கள் சார்பாக 18.01.2018 அன்று கோலப்போட்டி நடத்தப்பட்டது. போட்டியின் முடிவில் சிறந்த 5 கோலங்களுக்கு முறையே பரிசுகள் வழுங்கப்பட்டன.

1. I B.Sc.,(Maths)
2. I BCA., 3. II (MB)
4. III BBA., 5. I BBA.,

சிறந்த வாசகத்திற்கான பரிசுகள் (Slogan)

1. I BCA., 2. I B.Sc.(Maths)
3. II (MB) 4. I BBA.,
5. III BBA.,

## NCC





Our cadets excelled in all the camp activities conducted by Trichy Group NCC & Tamil Nadu NCC dte.

Three of our cadets.
**1.R.Thulasi** II B.Com (CA).
**2.S.Subahchandrabose** II B.A (Eco).
**3.Y. Balakumar** II B.Com.
were selected to represent trichy group NCC team in the Tamil Nadu inter group NCC competition held at Tirunelveli

•**Y. Balakumar II B.Com** was selected to represent Tamil Nadu NCC team in the **Republic Day** parade held at New Delhi 2018. He performed in group song and took part in Prime Minister's Rally.

•**D.Dhanamoovendhar II B.Sc** (Chemistry) and **S. Subash II BCA** were selected to represent **Tamil Nadu in the Prime Minister's** rally cultural camp. They performed traditional folk dance of Tamilnadu in front of prime minister.

•Twenty two cadets participated in the Annual Training camp at NCC Training Academy Madurai our college secured Gold Medal in Group Dance

## மாணவர் கருத்தரங்கம்





முதுகலைத் தமிழாய்வுத் துறையின் சார்பாக மாணவர் கருத்தரங்கம் 17.01.2018 அன்று தமிழியல் அரங்கில் நடைபெற்றது. ஆய்வியல் நிறைஞர் மாணவர்கள் ரெ.மகரஜோதி, செ.எஸ்கிளின் மேரி ஆகிய இருவரும் கட்டுரை அளித்தனர். இந்நிகழ்ச்சிக்குத் தமிழாய்வுத் துறைத்தலைவர் முனைவர் கோ.வீரமணி தலைமை வகித்தார்.

## பாரதி வாசகர் வட்டம்



மாணவர்களைத் திறனாய்வு செய்ய ஊக்கப்படுத்தும் முறையில் முதுகலைத் தமிழாய்வுத் துறையில் பாரதி வாசகர் வட்டம் 31.01.2018 அன்று நடத்தப்பட்டது. இதில் வேதியியல் துறையின் இளங்கலை முதலாமாண்டு மாணவி கா.ரேவதி, சி.மகேந்திரனின் தாமரை கதைகள் என்ற சிறுகதைத் தொகுப்பினைத் திறனாய்வு செய்தார்.

## Educational Tour-BBM



The Department of BBM organised an educational tour on Environmental studies, on 26.1.2018 at Anand farm house at Thillaiampur, Kumbakonam 50 students and 5 Staff members participated and gained knowledge about organic farming method and the effects of chemical pesticides.

## Students Study Circle

The Central library is conducting study circle on every wednesday for all UG and PG students to develop the knowledge on current affairs prizes were distributed by our college secretary to active participants and also for the winners of Quiz programme.

1. A.Felix II. BSW
2. R.Dhamayanthi I B.Sc, Chemistry
3. M.Vinoth. III B.Sc. Physics
4. P.Akalya. II B.Sc, Maths
5. E.Esther rani. II M.A, Tamil
6. S.Kalaiyarasi II B.Sc, Maths
7. S.Mathiazhagan. I B.Sc ,chemistry
8. V. Ramalakshmi. II B.sc Maths
9. R.Dhanalakshmi . II B.Sc, Maths.
10. K. Sivakani. II B.Sc Maths
11. M. Chinnazhagu. I B.Sc Chemistry
12. S.Kavya. II MA. Tamil.
13. S.Logeshwaran. III B.Com
14. R.Praveena II B.SC Maths


## சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டி





இந்தியா, நேபாளம், பூடான், இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ், மாலத்தீவுகள் ஆகிய 7 நாடுகளுக்கு இடையேயான 19 வயதிற்கு உட்பட்டோருக்கான சர்வதேச விளையாட்டுப்போட்டி ஜனவரி 19 முதல் 22 வரை நடைபெற்றது. இதில் நமது கல்லூரி இயற்பியல் துறை முதலாமாண்டு மாணவர் B.சிரஞ்சீவி சிலம்பம் மற்றும் ஜிம்னாஸ்டிக் போட்டிகளில் கலந்து கொண்டதோடு சிலம்பாட்டத்தில் முதல் இடம் பெற்று தங்கப்பதக்கமும் வென்றார்.

## பொங்கல் விழா



நமது கல்லூரியின் சமூகப் பணித்துறை மற்றும் servite social service society orphan children's இணைந்து நடத்திய பொங்கல் விழாவானது அனாதை குழந்தைகள் இல்லத்தில் நடைபெற்றது. குழந்தைகளுக்கு விளையாட்டுப் போட்டிகள் வைத்து வெற்றிபெற்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது.